செ.வெ.எண். 41/ஆகஸ்ட் தேதி : 19.08.2016

# தருமபுரி வட்டம், அதகபாடி ஊராட்சி, ஏ. செக்காரப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற அம்மா சிறப்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்கினார்.





தருமபுரி வட்டம், அதகபாடி ஊராட்சி ஏ. செக்காரப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற அம்மா திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.08.2016) பொதுமக்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைப் பெற்றுக்கொண்டு புதிய குடும்ப அட்டை 12 பயனாளிகளுக்கும், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்து 100 நபர்களுக்கும் வழங்கினார்.

பின்னர் ஏ. செக்காரப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலக கட்டிடத்தில் ஆதார் அட்டை பதிவு செய்யும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு பொதுமக்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டம் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி தெரிவித்ததாவது:-

அம்மா திட்ட முகாம்களில் பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் குறித்து மனுக்களை வழங்கலாம். அம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உறுப்பினராக சேர்ந்து உழவர் பாதுகாப்பு அட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து மரணம் உதவித் தொகைகள் பெற விண்ணப்பிக்கலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் ஏழை குடும்பங்களின் மருத்துவ பாதுகாப்பை நோக்கமாக கொண்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தை வழங்கியுள்ளார்கள். இதன் மூலம் உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்கள் ஆதரவற்ற முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்பெறலாம். தனிநபர் கழிப்பறை அமைக்க தமிழக அரசு ரூ. 12 ஆயிரம் வழங்கி வருகிறது. கழிப்பறை வசதி இல்லாதவர்கள் அனைவரும் கழிப்பறை அமைத்து கொள்ளவேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக ஏ. செக்காரப்பட்டி பகுதி மக்களின் இல்லத்திற்கு சென்று நியாய விலைக்கடையின் மூலம் பெறப்பட்ட உணவு பொருட்களின் விவரங்களையும், தரத்தினையும், பதிவேடுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இம்முகாமில் அதகபாடி ஊராட்சிமன்ற தலைவர் திருமதி. பச்சம்மாள் முருகவேல், வட்டாட்சியர்கள் திரு. ராஜசேகரன், திரு. ரவிச்சந்திரன், திரு. சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி